துவங்கப்பட வேண்டுமென்றும் கோருகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு இதனைக் கொண்டுசென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 365, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

365—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***32357—திரு. ஆர். சீனிவாசன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதியில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்குவது குறித்து, தற்போது கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள்.*

திரு. ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் முதற்கண் என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2014 ஆகஸ்ட் 7

வேலூர் மாவட்டத்திலுள்ள ஆற்காடு தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். இங்கு தாழ்த்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் அதிகமாக வசிக்கின்றனர். இங்குள்ள ஏழையெளிய மாணவ, மாணவிகள் பயன்பெற, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என ஆற்காடு தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 501 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 2 அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன; ஒரு aided பாலிடெக்னிக் கல்லூரி இருக்கிறது; 22 Self-financing பாலிடெக்னிக் கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகமொத்தம் 25 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி அமைந்த இரண்டு ஆண்டுகளில் 11 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளை வழங்கியிருக்கிறார்கள். அந்த வகையிலே, வேலூர் மாவட்டம், ஜோலார்பேட்டையில் ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் தொடங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 9,130 மாணவ, மாணவிகள் சேர்க்கைக்கான அனுமதி மற்றும் வாய்ப்பு இருக்கிறது. அந்த வகையிலே சென்ற ஆண்டு 5,469 மாணவர்கள் மட்டுமே சேர்ந்திருக்கின்றனர். இன்னும் மாணவர்கள் படிக்க வேண்டுமென்று சொன்னால், கூடுதலாக 3,661 இடங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்கள் பகுதி, கல்வியிலே பின்தங்கிய, கிராமப்புறங்களை அதிகமாகக் கொண்டிருக்கிற பகுதி என்ற ஒரு கருத்தினை சொல்லியிருக்கிறார்கள். அங்கே பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

2014 ஆகஸ்ட் 7]

தொடங்கவேண்டும் என்ற ஒரு கோரிக்கையையும் வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச்சென்று, எதிர்காலத்தில் உரிய கருத்துருவைப் பெற்று, அங்கே பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பதற்கான வாய்ப்பிருக்கும்பட்சத்தில், நிதிநிலைக்கேற்ப அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள்.

திரு. ஆர். சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைத்திட நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோவிலூர் தொகுதிக்குட்பட்ட மணக்குப்பம் கிராமத்தில் கடந்த 2011 ஆம் ஆண்டு கலைக் கல்லூரி கட்டுவதற்கான நிதி ஒதுக்கப்பட்டு, ஒப்பந்தமும் விடப்பட்டது. அதேபோன்று, திருவண்ணாமலை மாவட்டம், தென்னாங்கூரிலும், அதே ஆண்டிலே கட்டுவதற்காக நிதி ஒதுக்கப்பட்டது. நான் 2012 ஆம் ஆண்டில், இந்த அவையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் இதுசம்பந்தமாக குறிப்பிட்டு, நிதி ஒதுக்கப்படுமா என்ற வினாவை எழுப்பினேன். அதற்கு நிதி ஒதுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், தற்போது கிடைத்திருக்கிற செய்தியின்படி, அந்தக் கல்லூரிக் கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்படவில்லை; அந்த ஒப்பந்ததாரருக்கு முன்வைப்புத் தொகையும் திரும்பக் கொடுக்கப்பட்டுவிட்டது என்று அறிகிறேன். அதேபோன்று, தென்னாங்கூரில் 27-8-2014 அன்று ஒப்பந்தம் விடப்போவதாகவும் அறிகிறேன்.

எனவே, மணக்குப்பத்திலே புதிய கல்லூரிக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தென்னாங்கூரில் ஒப்பந்தம் விடுகிற விஷயம்கூட தெரிந்திருக்கிறது. அப்படித் தெரிந்திருந்தும், எப்பொழுது பணி தொடங்கப்படும் என்று கேட்பதில் நியாயமில்லை. அவை கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கொண்டுவரப்பட்டு, நிதிகூட ஒதுக்கப்பட்டது. கட்டடங்கள் கட்டுவதற்கான இடங்களைத் தேர்வு செய்வதில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் ஏற்பட்டன. அப்பொழுது ஒப்பந்தம் போடப்பட்ட நிலையில், அந்த ஒப்பந்ததாரர் கட்டடத்தைக் கட்டாமல் பாதியிலேயே விட்டுவிட்டு ஓடிவிட்டார். அப்படியிருக்கக்கூடிய நிலையை மாற்ற வேண்டுமென்பதற்காக மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், அந்த இரண்டு கல்லூரிகளுக்கும் நிரந்தரக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று ஆணை வழங்கியிருக்கிறார்கள். அதனடிப்படையில், கூடிய விரைவில் அதற்கான டெண்டர் விடப்பட இருக்கிறது. அந்த ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் பணிகள் முடிந்த பின்பு, அந்த இரண்டு கல்லூரிகளுக்கும் கட்டடங்கள் கட்டுவதற்கான பணி மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் தொடங்கி வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

திரு. ம. கலை அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழ்நாட்டில் பிளஸ் 2 தேர்வில் 90 விழுக்காடு தேர்ச்சி பெற்றுள்ள நிலையில், மாணவர்கள் கல்லூரிகளில் சேருவதற்கு மிகவும் ஆர்வமாக வருகின்றனர். அந்த அடிப்படையில், ஏற்கெனவே கல்லூரிகளில் இருக்கக்கூடிய

2014 ஆகஸ்ட் 7]

இடங்களை 20 அல்லது 25 விழுக்காடு உயர்த்தித் தருவார்களேயானால் சாதாரண ஏழையெளிய மாணவர்கள் எல்லாம் கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதற்கு ஏதுவாக இருக்கும். அதேபோல், தற்போது பொறியியல் கல்லூரிகளில் இலட்சக்கணக்கான இடங்கள் காலியாக இருக்கின்றன. மாணவர்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் படிப்பதற்கு ஆர்வமாக இருக்கிறார்கள். எனவே, தமிழக அரசு இதற்கு ஆவன செய்யவேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய தொகுதியில் புதியதாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

திரு. ம. கலை அரசு: என்னுடைய தொகுதியில் கல்லூரி வேண்டும் என்பது ஒரு கோரிக்கை. தற்போது +2 தேர்வில் அதிகமாக தேர்ச்சி பெற்றிருக்கிற மாணவர்கள் எல்லாம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஆர்வமாக சேர்கிறார்கள். ஆனால், கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கடந்த பல ஆண்டுகளாக இருக்கக்கூடிய இடங்களில் மட்டும்தான் மாணவர்கள் சேர்க்கப்படுவதால், பெரும்பாலான மாணவர்களுக்கு இடம் கிடைக்காத நிலை உள்ளது. ஆகவே, அந்தக் கல்லூரிகளுக்கு கூடுதலான இடங்களைக் கொடுத்து, தங்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்கின்ற ஆதங்கத்தில் இருக்கக்கூடிய மாணவர்கள் எல்லாம் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 ஆகஸ்ட் 7

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஐந்து ஆண்டுக்கால ஆட்சியில் வெறும் 250 கூடுதல் பாடப் பிரிவுகள்தான் ஒதுக்கினார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோன்று, பெரும்பாலான மாணவர்கள் தற்போது கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதற்கு அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். இதை மனதிலே வைத்துக்கொண்டுதான் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆட்சி அமைந்த மூன்று வருடங்களில், கிட்டத்தட்ட ஆயிரம் புதிய பாடப் பிரிவுகளுக்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டுகூட மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 163 புதிய பாடப் பிரிவுகளுக்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்ற நோக்கத்தோடுதான், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் இதுபோன்ற புதிய பாடத் திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள்.

அதோடுமட்டுமல்லாமல், இதுவரையில் இல்லாத அளவுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 53 கல்லூரிகளைத் தொடங்கி, தமிழகத்திலே சாதனை படைத்து இருக்கிறார்கள். அதிலே கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், 38 கல்லூரிகளைத் தந்திருக்கிறார்கள். மாணவர்கள் தங்கு தடையின்றி கல்வி பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு, இதுபோன்ற நல்ல பல திட்டங்களை எல்லாம் செயல்படுத்தி வருகிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதைவிட, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்ந்து படிக்கிற ஆர்வம் மாணவர்களிடம் அதிகம் இருக்கிறது. பாடப் பிரிவுகளைப் பொறுத்தவரையில், அவ்வப்பொழுது மாணவர்களுக்கு சில மாற்றங்கள் தேவைப்படும். அந்த மாற்றங்களுக்கு ஏற்ப புதிய கல்லூரிகளைத் தொடங்கி வைப்பதும், புதிய பாடப் பிரிவுகளை அனுமதிப்பதும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய அரசுதான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.